மாவட்ட அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்

முன்னிலை - திருமதி ஜி.சுபத்திராதேவி, எம்.எல்.,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்.

*2026* ஆம் ஆண்டு மார்ச் திங்கள் *27* ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.126/2023**
(TNCD 01-006738-2023)

(விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்.*2* அவர்களால் விசாரணைக்காக அனுப்பப்பட்ட முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.*96/2019)*
*(*ஆலடி காவல் நிலைக் குற்ற எண்.*96/2019)*

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | **அரசுக்காக**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ஆலடி காவல் நிலையக் குற்ற எண்.*96/2019*. |
| எதிரிகளின் பெயர் | : | *1.* முத்தையா, வயது *27*, த/பெ.பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம்.<br>*2.* வீரமணி, வயது *35*, த/பெ.கண்ணன், ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். |
| எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் | : | *1.* **திருடுதல் - இதச பிரிவு 379-ன் கீழ்**<br>அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி, சுயலாபம் கருதி டிப்பர் லாரியில் கள்ளத்தனமாக மணல் திருடியதன் பேரில் எதிரிகள் மீது இதச பிரிவு *379*-ன் கீழான குற்றச்சாட்டு.<br>*2.* **வேளாண்மைக்கான தண்ணீரைக் குறைப்பதற்கான சொத்து அழிப்பு - இதச பிரிவு 430-ன் கீழ்**<br>இயற்கை ஆதாரமான நீர் வளத்தை வழங்கும் கனிம வளமான மணலை திருடி அழிம்பு செய்ததின் பேரில், எதிரிகள் மீது இதச பிரிவு *430*-ன் கீழான குற்றச்சாட்டு. |

எதிரிகளின் பதிலுரை : குற்றவாளிகள் இல்லை

நீதிமன்றத்தின் முடிவு : எதிரிகள் குற்றவாளிகள் அல்லர்

நீதிமன்றத்தின் தீர்ப்பு : முடிவாக, எதிரிகளை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 258(1) of BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

வழக்குச் சொத்தான டாரஸ் லாரியை எற்கனவே இந்நீதிமன்ற உத்தரவு எண்.Crl.M.P.No.6937/2019 நாள் 18.11.2019-ந் தேதியிட்ட உத்தரவின்படி உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வழக்கில் அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 5 யூனிட் மணலை ஏற்கனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி 5 யூனிட் மணலை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்குச் சொத்திற்கான புகைப்படம் சா.பொ.1-ஐ வழக்கு கோப்புகளுடன் இணைத்து வைக்க உத்தரவிடப்படுகிறது.

## CASE SUMMARY

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | The period of remand of the accused | **Accused-A1 was remanded on 29.06.2019 and released on bail 26.07.2019.<br>Accused-A2 was surrendered and released on Anticipatory Bail on 09.10.2019 as per the order of Hon'ble High Court of Madras in Crl.O.P.No.25212/2019 on 20.09.2019.** | | |
| 2 | Date of filing of the complaint/final report in the court | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | 29.06.2019 | 24.10.2019 | |
| 3 | Date of Committal of the cases to the court of Sessions | 09.02.2023 | | |
| 4 | Date of Questioning of accused under section 228,240,246,251 of the Code of Criminal Procedure 1973/251, 263, 269, 274 of BNSS, as the case may be | 19.08.2025 | | |
| 5 | Filing of all miscellaneous petitions and their results on challenge before superior court; except routine petitions like petitions under section 317 of the code | Nil | | |
| 6 | Date of examination in chief and cross-examination of a witnesses | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | | P.W.1 | 24.02.2026 | 24.02.2026 |
| | | P.W.2 | 24.02.2026 | 24.02.2026 |
| | | P.W.3 | 24.03.2026 | 24.03.2026 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 7 | Date of examination of the accused under section 313 of Cr.P.C. / 351 of BNSS | 27.03.2026 | |
| 8 | Details of abscondance of an accused and his appearance/production, the case may be; and | - | |
| 9 | Grant of stay by superior courts and the results there of | - | |

இவ்வழக்கு என் முன்பு 27.03.2026-ந் தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்து, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.பி.பக்கிரி அவர்களும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.பரமேஸ்வரன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இவ்வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

29.06.2019-ந் தேதி 13.00 மணியளவில் பாலக்கொல்லை - விருத்தாசலம் மெயின்ரோட்டில் உள்ள கொட்டாரக்குப்பம் ஆஞ்சநேயர் கோயில் அருகில் எதிரிகள் 1. முத்தையா, வயது 27, த/பெ.பெருமாள், செட்டியார் தெரு மற்றும் 2.

வீரமணி, வயது 35, த/பெ.கண்ணன் இருவரும் ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்பவர்கள் இருவரும் சேர்ந்து திட்டம் போட்டு 1வது எதிரி TN-90-4621 என்ற எண்ணுள்ள முன்புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்ட டாரஸ் லாரியில் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படுத்தும்படியும், சுயலாபம் கருதியும் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் 5 யூனிட் ஆற்று மணலை திருட்டுதனமாக ஏற்றிக் கொண்டு வந்து குற்றம் புரிந்துள்ளதாக ஆலடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 379, 430 மற்றும் பிரிவு 21(1) Mines & Minerals Act-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள், விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்-2 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3. மேற்படி எதிரிகளின் மீது சொல்லப்பட்ட இதச பிரிவுகள் 379, 430 மற்றும் பிரிவு 21(1) Mines & Minerals Act-ன் கீழான குற்றமானது, மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமனற்ம் மதுரை கிளை முத்து - எதிர் - மாவட்ட ஆட்சியர் என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவின்படியும், அரசாணை எண்.298 நாள் 13.06.2019-ன்படியும் இவ்வழக்கானது அதற்கான சிறப்பு நீதிமன்றமான முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால், இவ்வழக்கினை விருத்தாசலம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள்

மேல்விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ)-ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.126/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டும், இருதரப்பும் கேட்கப்பட்டும், எதிரிகள் மீது சொல்லப்பட்ட குற்றங்களுக்கான, குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான அனுமானம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவே, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரிகள் மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.3. வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.4 வரையான ஆவணங்களும், சா.பொ.1 மட்டுமே குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு...**

அ.சா.1. சிவலிங்கம், தனது சாட்சியத்தில் தான் தற்போது விருத்தாசலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் எனவும், தான் கடந்த 29.06.2019 அன்று ஆலடி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது,

தானும் தலைமைக் காவலர் ஜெகதீசன் என்பவரும் பகல் 11.30 மணிக்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN-90-4621 என்ற எண்ணுள்ள முன்புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்ததாகவும், அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க தனது பெயர் முத்தையா, வயது 27, த/பெ.பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்றும், மேற்படி டாரஸ் லாரி தங்கள் ஊரைச் சேந்த வீரமணி, த/பெ.கண்ணன் என்றும், ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும், மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும், குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்று தங்கள் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும், இதற்கு எந்தவித அரசு அனுமதியோ, பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு உதவி ஆய்வாளார் கைது செய்ததாகவும், மேற்படி எதிரி எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில்

11.45 மணிக்கு பதிவு செய்ததாகவும். தற்போது தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் எனவும், மேலும் ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு தங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் எனவும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1. எனவும், வழக்கு சொத்து எண்.210/2019 எனவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும், அந்த புகைப்படம் சா.பொ.1. எனவும். எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண்.96/2109 சட்டப் பிரிவுகள் 379 மற்றும் 430 உ/இ. 21(1) எம்.எம். ஆக்ட்டின் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினதாகவும். தான் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், விசாரணை அதிகாரி தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2. ஜெகதீசன் தனது சாட்சியத்தல் தான் தற்போது ஆவினன்குடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் எனவும், தான் கடந்த 29.06.2019 அன்று ஆலடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது தானும், சிவலிங்கம் என்பவரும் பகல் 11.30 மணிக்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக மணல் கடத்தல் தடுப்பு

சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN-90-4621 என்ற எண்ணுள்ள முன்புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தததாகவும், அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க தனது பெயர் முத்தையா, வயது 27, த/பெ.பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்றும், மேற்படி டாரஸ் லாரி தங்கள் ஊரைச் சேந்த வீரமணி, த/பெ.கண்ணன் என்றும், ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும், மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும், குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்று தங்கள் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும், இதற்கு எந்தவித அரசு அனுமதியோ, பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு உதவி ஆய்வாளார் கைது செய்ததாகவும், மேற்படி எதிரி எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்னிலையில் 11.45 மணிக்கு பதிவு செய்ததாகவும். தற்போது தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி

கையொப்பம் தன்னுடையது தான் எனவும், மேலும் ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு தங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் எனவும், வழக்கு சொத்து எண்.210/2019 எனவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும், எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண்.96/2109 சட்டப் பிரிவுகள் 379 மற்றும் 430 உ/இ. 21(1) எம்.எம். ஆக்ட்டின் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினதாகவும். தான் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், விசாரணை அதிகாரி தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3. ராதாகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் தான் விழுப்பரம் மாவட்டம் நல்லான்பிள்ளை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2022 அன்று விருப்ப ஓய்வு பெற்று தற்போது உளுந்தூர்பேட்டையில் வசித்து வருகிறதாகவும், தான் கடந்த 29.06.2019 அன்று ஆலடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது பகல் 11.30 தனக்கு உதவியாக அ.சா.1. மற்றும் அ.சா.2. ஆகியோர்கள் சகிதம் மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர்

கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN-90-4621 என்ற எண்ணுள்ள முன்புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தததாகவும், அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க தனது பெயர் முத்தையா, வயது 27, த/பெ.பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்றும், மேற்படி டாரஸ் லாரி தங்கள் ஊரைச் சேந்த வீரமணி, த/பெ.கண்ணன் என்றும், ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும், மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும், குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும், சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்று தங்கள் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும், இதற்கு எந்தவித அரசு அனுமதியோ, பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு கைது செய்ததாகவும், மேற்படி எதிரி எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 11.45 மணிக்கு பதிவு செய்ததாகவும். ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1-ஆக ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு சொத்து எண்.210/2019 தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும், எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண்.96/2109 சட்டப் பிரிவுகள் 379 மற்றும் 430 உ/இ. 21(1) எம்.எம். ஆக்ட்டின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2. எனவும், பின்பு எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினதாகவும். வருவாய் வட்டாட்சியரிடம் மணலை ஒப்படைத்து சான்று பெற்றதாகவும், அந்த சான்று அ.சா.ஆ.3 எனவும், வாகனத்தினை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், படிவம் 91 அ.சா.ஆ.4. எனவும், பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2-ஐ விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதவு செய்ததாகவும், இறுதியாக விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)/351 of BNSS-ன் கீழ் எடுத்துக் கூறி கேள்விக் கேட்ட போது, மேற்படி எதிரிகள பொய் வழக்கு என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறியுள்ளார். எதிரிகளின் தரப்பில் ஆவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8. இவ்வழக்கின் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், தனது வாதுரையில் அ.சா.1., அ.சா.2 மற்றும் அ.சா.3. ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்த போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 29.06.2019-ந் தேதி 13.00 மணியளவில் 1வது எதிரி முத்தையா என்பவர் TN-90-4621 என்ற எண்ணுள்ள டாரஸ் லாரியில் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் கள்ளத்தனமாக கனிம வளத்தை அழிக்கும் வகையில் ஆற்று மணலை கடத்தி வந்த போது, எதிரியை காரணம் கூறி கைது செய்து, கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, கடத்தப்பட்ட 5 யூனிட் மணலை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு, லாரியின் உரிமையாளரான 2வது எதிரியையும் சேர்த்து, எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமாய் வாதிட்டார்.

10. கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அரசுத்தரப்பில் கூறுவது போல் எதிரிகள் மணல் எதுவும் கடத்தவில்லை என்றும்,

இவ்வழக்கில் பொது மக்களோ அல்லது வருவாய் துறை அதிகாரிகளோ, எதிரிகள் எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இன்றி மணலை தங்களது டாரஸ் லாரியில் திருடி சென்றதாக புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகள் டாரஸ் லாரியை அவர்களது வேலைக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், 29.06.2019-ந் தேதியன்று கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணலை வட்டாட்சியர் அலுவலகத்தில் காலதாமதமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறிய மேற்படி சங்கதியிலிருந்தே, புள்ளி விவர கணக்கிற்காக (Statistical purpose) காவல் துறையினரே புகார்தாரராக இருந்து, எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், காவல் துறையினரே கைப்பற்றுகை மகசர் சாட்சிகளாக உள்ளனர் என்றும், வருவாய் துறையினர் புகார் அளிக்காத பட்சத்தில், எதிரிகள் தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரண்பாடு உள்ளது என்றும், எனவே, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

11. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. இவ்வழக்கில் முன்னிடப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும், சான்று பொருட்களையும் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

12. அரசுத்தரப்பு வழக்கானது, 29.06.2019-ந் தேதி 13.00 மணியளவில் 1வது எதிரி முத்தையா, த/பெ.பெருமாள் என்பவர், 2வது எதிரியான வீரமணி, த/பெ. கண்ணன் என்பவரின் உத்தரவின் பேரில் டாரஸ் லாரியில் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் கள்ளத்தனமாக இயற்கை வள ஆதாரத்தை கெடுத்து அரசுக்கு நஷ்டமும் ஏற்படும் வகையில் ஆற்று மணலை கடத்தி வந்து குற்றம் புரிந்துள்ளார் என்பதேயாகும். இயற்கை வளங்கள் மற்றும் வாழ்வாதாரத்தில் ஒன்றான நீர்வளத்திற்கு அழிம்பு ஏற்படும் வகையில், ஒரு கைப்பையிலோ அல்லது ஒரு மூட்டையிலோ அல்லது அதிகப்படியான 1/2 யூனிட் அளவிலோ மணலை திருடிச் செல்வது குற்றமேயாகும். இருந்த போதிலும், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளனவா? என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் - 1957-ன்படி

**"பெரிய கனிமங்கள் மற்றும் சிறு கனிமங்களைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆர்.டி.ஓ./துணை ஆட்சியர்களுக்கு சட்டத்தின் பிரிவு 22-ன் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் காவல்**

***ஆய்வாளர் மற்றும் மாவட்ட வன அலுவலர் பதவிக்குக் குறையாத அதிகாரிகள் தகுதி வாய்ந்த அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்கலாம். சட்டத்தின் பிரிவு 21(4), சட்டத்தின் கீழ் கனிமங்கள், கருவிகள், வாகனங்கள் போன்றவற்றை பறிமுதல் செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளான துணை தாசில்தார், புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர், உதவி புவியியலாளர்கள், சிறப்பு தாசில்தார் (சுரங்கங்கள்), சிறப்பு துணை தாசில்தார் (சுரங்கங்கள்) மற்றும் காவல் ஆய்வாளர் பதவிக்குக் குறையாத காவல்துறை பணியாளர்கள் ஆவர்"***

*13.* இவ்ழக்கினை பரிசீலனை செய்கையில், காவல் ஆய்வாளர் பதவிக்கு குறைவான பதவியில் உள்ள அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர் தான் புகார்தாரராக இருந்து, வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை செய்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் ரோந்து பணியில் இருந்த போது, அ.சா.1, அ.சா.2. மற்றும் அ.சா.3 ஆகியோருடன் ***<u>எந்த இடத்திற்கு எந்த வகையான ரோந்து பணிக்கு சென்றனர்</u>*** என்பது குறித்து தெளிவாக எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. அதே போல் 29.06.2019 அன்று எதிரி முத்தையா ஓட்டி வந்த டிப்பர் லாரியில் இருந்து 5 யூனிட் மணல் கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 5 யூனிட்

மணலை ஒப்படைத்துள்ளார் என்பது மட்டுமே தெரிய வருகிறது. ஆனால் அந்த மணலை அன்றே ஒப்படைக்கவில்லை என்பது தெரிய வருகிறது. அ.சா.1. மற்றும் அ.சா.2. ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, மேற்படி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக அ.சா.1. தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். மேலும் அதில் உள்ள முதல் கையொப்பமும் தன்னுடையது தான் என்று கூறியுள்ளார். அ.சா.3. தனது குறுக்கு விசாரணையில் புகார் காலத்திற்கு முன்போ, பின்போ கனிம வளத்துறைக்கோ வருவாய் துறைக்கோ தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் எனவும், திருச்சியில் உள்ள விராலிமலைக்கு சென்று மணல் அள்ளப்பட்டதாக சொல்லும் இடம் சென்று பார்த்து வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான் எனவும், வாகனம் கைப்பற்றியதாக சொல்லும் இடத்திற்கு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் எனவும், முதல் தகவல் அறிக்கையில் காலம் 3சில் பொதுநாட்குறிப்பு விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் எனவும், முதல் தகவல் அறிக்கைக்கு முன்பு தனி அறிக்கை எதுவும் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் எனவும், மகசரில் மணல் அள்ளியதற்கான உபகரணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் எனவும், வருவாய் வட்டாட்சியரிடம் 18 நாட்கள் கழித்து 17.10.2019 அன்று தான் மணல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும் குறிப்பிட்டு தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேலும் இவ்வழக்கில் அ.சா.3. உதவி ஆய்வாளர் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்றம் Muthu Vs. District Collector - என்ற தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை. மேலும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமனற்ம் Crl.O.P.No.7104/2025 and Crl.M.P.No.4531/2025 dated 12.03.2025, Tamizhazhagan Vs. The State Rep. By Sub Inspector of Police, Kammapuram P.S., Cuddalore District and another என்ற வழக்கில் "The complainant cannot be the Investigating Officer" என்ற முன் தீர்ப்பில் புகார்தாரரே புலனாய்வு அதிகாரியாக இருக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதிகளை பார்க்கும் போது அ.சா.3. காவல் உதவி ஆய்வாளர், சட்டத்திற்கு முரணாக தானே புகார்தாரராக இருந்து, தானே வழக்கு பதிவு செய்துக் கொண்டு, தானே புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரிகள் மீது எவ்வித முகாந்திரமும் இன்றி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது காண முடிகிறது. எனவே, மேற்படி அரசுத்தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து எதிரிகள் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளிகள் அல்லர் என்று தீர்மானித்து, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யத்தக்கவர்கள் என்றும், இவ்வழக்கில் இவ்வாறாக பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

15. முடிவாக, எதிரிகளை இதச பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 258(1) of BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

வழக்குச் சொத்தான டாரஸ் லாரியை எற்கனவே இந்நீதிமன்ற உத்தரவு எண்.Crl.M.P.No.6937/2019 நாள் 18.11.2019-ந் தேதியிட்ட உத்தரவின்படி உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவரே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வழக்கில் அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 5 யூனிட் மணலை ஏற்கனவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி 5 யூனிட் மணலை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்குச் சொத்திற்கான புகைப்படம் சா.பொ.1-ஐ வழக்கு கோப்புகளுடன் இணைத்து வைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில்அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.27 18:44:02 +0400

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | திரு. சிவலிங்கம், தலைமைக் காவலர். |
| அ.சா.2. | திரு. ஜெகதீசன், தலைமைக் காவலர். |
| அ.சா.3 | திரு. ராதாகிருஷ்ணன், உதவி ஆய்வாளர். (ஓய்வு) |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | 29.06.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2. | 29.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3. | 17.10.2019 | ஒப்படைப்பு சான்று |
| அ.சா.ஆ.4. | 29.06.2019 | படிவம்-91 |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u>**

*சா.பொ.1.* வழக்குச் சொத்திற்கான புகைப்படம்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்று பொருள்</u>** - *இல்லை*

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.03.27 18:44:23 +0400

*முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,*
*கடலூர்.*

வரைவு/சீரான தீர்ப்புரை

அமர்வு வழக்கு எண்.126/2023

நாள் - 27.03.2026